# 16-05-2024 செய்தி

## ராமசரிதமானஸ், பஞ்சதந்திர கதைகள்

**யுனெஸ்கோ உலக பிராந்திய நினைவுப் பட்டியலில்...**

- 'நிகழாண்டு யுனெஸ்கோ உலக பிராந்திய நினைவுப் பதிவுக்கான பட்டியல், மனித ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்பு மற்றும் கற்பனைகளைக் கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.
- அந்த வகையில், ராமரின் சரித்திரத்தைக் கூறும் துளசிதாசரின் 'ராமசரிதமானஸ்' கதையின் கையெழுத்துப் பிரதி, பஞ்சதந்திர கதைகளின் 15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கையெழுத்துப் பிரதி ஆகியவற்றை இந்தப் பட்டியலில் இடம்பெறச் செய்ய முடிவெடுக்கப்பட்டது'.
- இது தொடர்பாக யுனெஸ்கோ சார்பில் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையில், 'கல்கா மங்கோலியர்களின் பரம்பரைப் பிரபுக்களின் குடும்ப விளக்கப்படம், செங்கிஸ் கான் வீடு, சீனாவில் உள்ள ஹுஃப்ஷோ சமூகங்களின் புகைப்படம் ஆகியவை பிராந்திய குடும்ப வரலாற்றின் சான்றாக இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.
- ஹெலிகாப்டர்கள் மற்றும் சூரிய மின் தகடுகள் கண்டுபிடிக்கப்படுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே, அவை கற்பனையாக குறிப்பிடப்பட்ட வங்கதேச அறிவியல் புனைக்கதை பெண்ணிய எழுத்தாளர் எஸ். ரோகியா ஹுஸைனின் 1905-ஆம் ஆண்டைச் சேர்ந்த 'சுல்தானாவின் கனவில்', என்ற புனைக்கதை பிரதியும் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.
- இதுபோல் ஆசிய-பசிபிக் பிராந்தியத்திலிருந்து 20 பொருள்கள் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன'.

SURESH'

## சூரிய புயலின் தாக்கத்தை படம் பிடித்த ஆதித்யா

- சூரியனில் ஏற்பட்ட வெடிப்பால் உருவான சக்திவாய்ந்த புயலின் தாக்கத்தை ஆதித்யா எல்-1 விண்கலம் பதிவு செய்ததாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.
- மே 11-ம் தேதி சூரியனின் 'ஏஆர்-13664' பகுதியில் ஏற்பட்ட வெடிப்பில் உருவான பலத்த மின்காந்த புயலின் தாக்கம் பூமியில் உணரப்பட்டது.
- இது 2003-ம் ஆண்டில் இருந்து இதுவரை சூரியனில் ஏற்பட்ட மிக சக்திவாய்ந்த புயலாகும்.
- அதையொட்டி பல்வேறு எக்ஸ் ரக கதிர்களும் கடந்த சில நாட்களாக பூமியை தாக்கின. இத்தகைய நிகழ்வுகள் வரும் நாள்களில் அதிகளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- எனினும், இந்தியாவில் இதன் தாக்கம் குறைவாகவே இருந்தது. மேலும், அதிக வெப்பமுடைய பிளாஸ்மா சூரிய காற்று அந்த பகுதியில் வீசி வருகிறது.